[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்தினைக் கலந்து மாவட்ட விளையாட்டு மன்றம் மூலம் அரசின் முழு நிதி உதவியுடன் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட வேண்டும் எனும் கொள்கைக்கேற்ப பாளையங்கோட்டையில் 11—2—1978-ல் திறக்கப்பட்ட அண்ணா விளையாட்டு அரங்கத்தைத் தவிர வேறு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் திட்டமேதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. யா.சை.மு. யூசப்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அண்ணா விளையாட்டரங்கத்தில் ஒரு பக்கத்தில் மட்டுந்தான் பார்வையாளர் அமர்ந்து பார்க்கும் வகையில் மாடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடமும் ஒதுக்குப்புறமாக இருக்கும் காரணத்தால் நெல்லை நகரில் வயல் வெளியை அரசு கையகப்படுத்தியாவது நல்ல முறையில், நவீன முறையில் அந்த மாவட்ட மக்கள் நலனைக் கருதி விளையாட்டரங்கம் ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அண்ணா விளையாட்டரங்கைச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு அரங்கத்தைச் சிறப்பாகச் செய்வதற்காக நிதி கோரி நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அன்னாரின் விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

* வினா எண் 811 ; திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. கோ. ரகோத்தமன்: தென்னாற்காடு மாவட்டம், முகையூர் பஞ்சாயத்து யூனியன் 65 பஞ்சாயத்துக்களையுடையது. அதிகமான மக்கள் தொகையுடையது, நிலப் பரப்பு அதிகமாக உள்ளது. ஆகவே, உடனடியாக அதைப் பிரிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1974-ல் இப்படி ஒரு கருத்துரு இருந்தது. ஆனால் சாலை வசதிகள் அந்த வட்டாரத்தில் செய்துள்ளதன் விளைவாக அந்தக் கருத்துருவின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு பொது மக்கள் கருத்தையறிந்து முடிவு செய்யப்படும்.

திரு. துரை முத்துசாமி: பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் சமீபத்தில் வர இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பெரிய பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்று கேட்கும்போது மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருபதில் கூறுகிறார். டி.ஆர்.டி. யிடமிருந்து ஒரு பதில் வருகிறது. அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லுகிறார்கள். பெரிய பஞ்சாயத்து யூனியன்கள் பிரிக்கப்படுவதற்குக் காலவரையறை ஏதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முடிவு செய்வது மாவட்ட ஆட்சித் தலைவரல்ல. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரும் அல்ல. அரசாங்கம் தான். அரசாங்கம் சிலவற்றை இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

*வினா எண் 812 : திரு டி.ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் தொகுதியில் உள்ள ஒலக்கூர், மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊராட்சிகள் 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் இணைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவைகளைப் பிரித்தமைக்கு உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. டி.ஆர். இராஜாராம் ரெட்டி: இந்த மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கிலோ மீட்டர் முதல் 8 கிலோமீட்டர் தூரம் வரையில் உள்ள கிராமங்கள் கிட்டத்தட்ட 60 கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அதைப் பிரித்தால் அங்கே உள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அவசியமாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.